பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

18 02 2026 WEDNESDAY 7 15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கடல்சார் பாதுகாப்பில் கடற்படையினர் ஆற்றி வரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. அமெரிக்காவுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் காரணமாக, விவசாயிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

3. பத்தாண்டுகளை நிறைவு செய்துள்ள பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம், விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

4. சீனாவில் பட்டாசுக் கடை ஒன்றில் நேரிட்ட தீ விப்தில் 12 பேர் உயிரிழந்தனர்.

5. டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரிவசை பட்டியலின் பேட்டிங் பிரிவில், இந்தியாவின் அபிஷேக் சர்மா முதலிடத்தில் நீடிக்கிறார்.

>>>>>><<<<<<

கடல்சார் பாதுகாப்பில் கடற்படையினர் ஆற்றி வரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

விசாகப்பட்டிணத்தில் நடைபெற்ற சர்வதேச கடற்படை ஆய்வுக் கூட்டத்தில் தலைமை வகித்து அவர் பேசினார்.

கடல்சார் வர்த்தகத்தை விரிவாக்குவதற்கும் கடற்படை பங்களித்து வருவதாக திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்தார்.

>>>>>><<<<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திலும் விண்வெளி தொழில்நுட்பத்திலும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதென இந்தியாவும் பூட்டானும் முடிவு செய்துள்ளன.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன், பூட்டான் பிரதமர் திரு. Tshering Tobgay நடத்திய பேச்சுகளின் போது, இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாக வெளியுறவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இருநாடுகளுக்கு இடையேயான கலாச்சார உறவை மேம்படுத்துவது குறித்து இந்த பேச்சுகளின் போது விவாதிக்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்து வருவதாக எஸ்டோனியா அதிபர் திரு. Alar Karis கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் நடத்திய பேச்சுக்களுக்குப் பின்னர், சமூகவலைதளத்தில் அவர் இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான பயணத்தில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் இன்று நடைபெற்ற அமர்வுக்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

உற்பத்தி துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

இதன்மூலம் உற்பத்தி மேம்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பாதுகாப்பான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாட்டில், இந்தியாவும் பிரான்சும் உறுதியுடன் உள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மாநாட்டிற்கான பிரான்ஸின் சிறப்பு பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுகளுக்குப் பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்ப பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

ஆராய்ச்சி, அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளில் இருநாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதென இந்த பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

அமெரிக்காவுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் காரணமாக, விவசாயிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர். நமது விவசாயிகள் மற்றும் சிறு குறு தொழில்துறையினரின் நலன்கள் முழுமையாக பாதுகாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த ஒப்பந்தம், தொழில்துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதற்கும், ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும் உதவிடும் என்று திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டம், பத்தாண்டுகளை நிறைவு செய்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக இந்த திட்டம் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பான பயிர் - செழிப்பான விவசாயி என்ற மையக்கருத்துடன் செயல்படுத்தப்பட்டு வரும் இந்த திட்டம், இயற்கை பேரிடர் காலங்களில் விவசாயிகளுக்கு பாதுகாப்பு கவசமாக திகழ்கிறது என்று அவர் கூறியுள்ளார்.

விவசாயிகளின் வருமான பாதுகாப்பை இந்த திட்டம் உறுதி செய்துள்ளதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

கைவினைக் கலைஞர்களின் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக சமூகநீதித்துறை இணையமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தின் நினைவுப் பரிசுகள் விற்பனை மையத்தை இன்று திறந்து வைத்து அவர் பேசினார்.

கைவினைக் கலைஞர்களுக்கு உரிய வர்த்தக வாய்ப்புகள் கிடைப்பதற்கு ஏதுவாக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் டாக்டர் வீரேந்திர குமார் கூறினார்.

>>>>>><<<<<<

புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளாகத்தை பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டாவுடன் இணைந்து இன்று தொடங்கி வைத்தார்.

சுகாதாரத் துறையில் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பில், இந்த மையம் தொடங்கப்பட்டுள்ளது முக்கியமான அம்சம் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சுகாதாரத்துறை தொடர்பான சவால்கள், ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகள் குறித்து இருநாடுகளும் ஒருங்கிணைந்து செயலாற்றும் நோக்கில் இந்த மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகத்தின் வரலாற்றையும், சிறப்பையும் இளைய தலைமுறையினரிடையே கொண்டு சேர்க்கும் வகையில் மாபெரும் தமிழ்க் கனவு என்ற நிகழ்ச்சி நடத்தப்படுவதாக மாநில உயர்கல்வி அமைச்சர் திரு. கோவி செழியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் இதன் 400வது நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

கல்லூரி இளைஞர்கள், தங்களது அடுத்தகட்ட இலக்குகளை நோக்கிச் செல்லும் வகையில் இந்த நிகழ்ச்சி இருப்பதால், ஆண்டுதோறும் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஒரு கல்வியாண்டில் 2 லட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுவதாகவும் திரு. கோவி செழியன் கூறினார்.

>>>>>><<<<<<

அஸ்ஸாமில், வெளிநாடுகளைச் சேர்ந்த ஒரு லட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சட்டவிரோதமாக தங்கியுள்ளது கண்டறியப்பட்டுள்ளதாக அம்மாநில அமைச்சர் திரு. Atul Bora கூறியுள்ளார்.

அம்மாநில சட்டப்பேரவையில் இதனை தெரிவித்த அவர், இதில் 30 ஆயிரம் பேர் அவரவர் நாடுகளுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

>>>>>><<<<<<

கர்நாடகாவில் அரசு நிலங்கள் குறைந்த விலைக்கு காங்கிரஸ் கட்சிக்கு விற்கப்படுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. Gaurav Bhatia, காங்கிரஸ் கட்சி அலுவலகங்களை கட்டுவதற்காக இந்த நிலங்கள் விற்கப்படுவதாக குறை கூறினார்.

>>>>>><<<<<<

குஜராத்தில் மாணவர்கள் நலனுக்கான திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அம்மாநில நிதியமைச்சர் திரு. Kanubhai Desai கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இன்று தாக்கல் செய்து அவர் பேசினார்.

2030ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள அஹமதாபாதை மேம்படுத்துவதற்கான தொலைநோக்குத்

திட்டம் 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான மேம்பாட்டு நிதியம் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் திரு. Kanubhai Desai வெளியிட்டார்.

>>>>>><<<<<<

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான அமைதி பேச்சுகள் எவ்வித முடிவும் எட்டப்படாமல் முடிவடைந்தது.

ஜெனீவாவில் சுமார் இரண்டு மணி நேரம் இந்த பேச்சுகள் நடைபெற்றதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த அமைதி பேச்சுகள் தோல்வியடைந்ததற்கு, ரஷ்யாவின் செயல்பாடுகள் தான் காரணம் என்று யுக்ரைன் அதிபர் திரு. Volodymyr Zelenskiy கூறியுள்ளார்.

இருப்பினும் ரஷ்யா தரப்பில், அடுத்தகட்ட பேச்சுகள் விரைவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சீனாவில் பட்டாசு கடையில் நேரிட்ட தீ விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர்.

Hubei மாகாணத்திற்கு உட்பட்ட பகுதியில் செயல்பட்டு வந்த இந்தக் கடையில் ஏற்பட்ட விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

பட்டாசுக் கடை அருகே வெடி வைக்கப்பட்டதன் காரணமாக, இந்த விபத்து நேரிட்டதாக முதல்கட்ட விசாரணையில் தெரியவந்ததாகவும் அவர்கள் கூறினார்.

>>>>>><<<<<<

டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரிவசை பட்டியலின் பேட்டிங் பிரிவில், இந்தியாவின் அபிஷேக் சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

Ishan Kishan, 8வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா - நெதர்லாந்து இடையேயான ஆட்டம் சற்றுமுன் தொடங்கியது.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்து வரும் இந்தியா, சற்றுமுன்வரை 4 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 35 ரன் எடுத்துள்ளது.

>>>>>><<<<<<

உகாண்டா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Himanshu Desai, Srivarshan Mahendren மற்றும் Muskan Sangwan முதலாவது தகுதிச் சுற்று ஆட்டங்களில் வெற்றி பெற்றனர்.

>>>>>><<<<<<

Hobart-ல் நடைபெறவுள்ள புரோ லீக் ஹாக்கிப்போட்டிக்கான 24 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் Angad Bir Singh-க்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஆசிய Cross Country சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி இன்று ஜப்பான் புறப்பட்டுச் சென்றது.

ராணுவத்தின் Harmanjot Singh தலைமையிலான இந்த அணியில் 12 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி, Fukeoka-வில் வரும் சனிக்கிழமை தொடங்குகிறது.

>>>>>><<<<<<

துபாய் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில், 16 தங்கம் 13 வெள்ளி, 14 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில், முதலிடத்தை பிடித்த இந்திய அணிக்கு, மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா பாராட்டு தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<